**தலைப்பு - 149 கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் நீண்ட காலமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதியில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டெம்பர் 08 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதியிடப்பட்ட 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் நீண்ட காலமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதி நிலைமைக்கூற்றுத் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் சிங்கள மொழிபெயர்ப்பக்கான பக்கம் 24 இல் மொத்த மீண்டெழும் செலவினங்களின் கூட்டுத்தொகையின் கீழ் மொத்த ஒதுக்கீட்டு மதிப்பீட்டின் கூட்டுத்தொகை ரூபா 4,248,000 பெறுமதியானது மற்றும் நிதி ஒழுங்கு விதி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவினத்தின் மொத்த தொகை ரூபா 31,381,575 பெறுமதியான தழிழ் மொழிபெயர்ப்பின் பக்கம் 104 இல் காட்டப்பட்டிருக்கவில்லை. | மொழியியல் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று ஒப்பிடப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் அச்சு குறைபாடுகளை நிவர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | சுமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைக்கூற்றில் ஏசிஏ 2(ii) படிவத்தில் தழிழ் மொழி பெயர்ப்பில் மொத்த அரச முதலீட்டு செலவினங்களின் மொத்த ஒதுக்கீட்டின் மதிப்பீடு ரூபா 3,039.742,000 பெறுமதியாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,043,990,000 காட்டப்பட்டிருந்தது. மேலும், சிங்கள பதிப்பில் எல்லாச் செலவினங்களின் மொத்த தொகை ரூபா 4,329,647,343 ஆக காட்டப்பட வேண்டிருந்த போதிலும் ஆங்கிலம் மற்றும் தழிழ் பதிப்பகத்தில் அத்தொகையானது ரூபா 4,538,024,069 ஆக காட்டப்பட்டிருந்தது. | மொழியியல் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று ஒப்பிடப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் அச்சு குறைபாடுகளை நிவர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச்செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லதா வருவாய்கள் ரூபா 61,768,883 ஆகவும் மொத்த காசோலை மீதி ரூபா 56,104.189 ஆக காட்டப்பட்டிருந்ததது. | சரியான பெறுமதியினை இனங்கண்டு நிதி நிலைமைக் கூற்றுகளை சரியாக தயாரித்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றுக்களை தயாரிக்கும் போது வருமானம் அல்லதா வருவாய்கள் இனங்காணப்பட்ட ரூபா 61,768,883 பெறமதி ஏசீஏ 03 படிவத்தில் தகவல்களின் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனச் செலவினங்களின கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 2,830,933,966 பெறுமதியான ஒதுக்கீடு வகைமாற்றத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்கம் 149-1-2-13-2202 இனைக் கொண்ட குறிப்பிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 192,503,470 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் பதிப்பினை ஒப்பீடும் போது ரூபா 193,670,229 ஆக காணப்பட்டது. இதற்கமைய ரூபா 1,166,760 வேறுபாடு காணப்படுகின்றது. | நிதி நிலைமைக்கூற்றினை தயாரிக்கும் போது சரியான மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றுக்களில் மூலதனச் செலவினத்தின் கீழ் ஆக காட்டப்பட்டிருந்த ரூபா. 2,830,933,906 பெறுமதியினுள் 149-1-2-13-2202 செலவின விடயத்தின் மொத்த செலவினமானது பதிப்பில் தவறுதலாக குறைத்து காட்டப்பட்டிருந்தது. |

## 1.6.3 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பண கணக்குகளின் பெறுமதியில் இருந்து வைப்புக்கணக்களின் பெறுமதியினைக் கழித்த பின் பெறுமதி ரூபா 10,406,807 ஆக காணப்பட்டது. இப் பெறுமதியானது நிதி நிலைமைக்கூற்றுக்களில் தேறிய சொத்துக்களில்/மொத்த சொத்துக்களின் வகையாக காட்டப்பட வேண்டிய போதிலும் இப் பெறுமதி ரூபா. 9,932,442 ஆக பதியப்பட்டிருந்த காரணத்தினால் சொத்துக்கள் பொறுப்புக்கள் ரூபா 19,864,885 ஆக வேறுபட்டுக் காணப்படுகின்றது. | கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டிய சரியான பெறுமதியினை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிநிலைமைக்கூற்றினை தயாரிக்கும் போது நிகர சொத்துக்கள்/மொத்த சொத்துக்களின் கீழ் முற்பணக் கணக்குகளிலிருந்து வைப்புக் கணக்குகளின் பெறுமதியினை கழித்த பின்னரான அமைச்சினால் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய மேலதிக பெறுமதியாக காணப்படுகின்றது. எனினும் திறைசேரியின் பதிப்பில் தவறுதலாக எதிர்மறை பெறுமதியாக காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) | திறைசேரி பதிவிற்கிணங்க 2019 திசெம்பர் 31 ஆம் திகதி நிதியல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,614,530,605 ஆக காணப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்கிணங்க நிதியல்லாச் சொத்தக்களின் பெறுமதி ரூபா 1,661,196,687 ஆக காணப்பட்டது. எனவே ரூபா 46,666,082 பெறுமதியானது வேறுபாடாக காணப்பட்டது. | நிதி நிலைமைக்கூற்றினை தயாரிக்கும் போது சரியான மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். | உரிய வேறுபாடுகள் தொடர்பாக திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் உத்தியோகத்தரினால் பரீட்சித்த பார்க்கும் போது வெளிக்கொண்டுவரப்பட்ட திறைசேரியின் பதிப்பு மற்றும் அமைச்சுக்களின் பதிப்பில் நிதியல்லாச் சொத்தக்கள் உள்ளடக்கப்பட்ட BOSS அறிக்கையுடன் இணங்கப்படாமை காரணமாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் உரிய இணக்கப்பட்டினை |

| | | | |
|---|---|---|---|
| | | | சீர்செய்வதற்கு மற்றும் சரிசெய்வதற்கும் பொதுநாட்குறிப்பேடு அமைச்சினால் அரச கணக்குகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உரிய இணக்கப்பாடு தொடர்பாக பொது நாட்குறிப்பேட்டினால் மாதாந்த (2020 யூலை) பொழிப்புக் கணக்கு ஊடாக அரச கணக்குகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு சீர்செய்யப்பட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பெறுமதி மற்றும் 2019 சனவரி 01 ஆம் திகதியில ஆரம்ப பெறுமதிக்கு இடையிலான ரூபா. 10,968,825 வேறுபாடுகள் வெளிக்கொண்டுவரப்பட்டன. இந்த வேறுபாட்டுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக காட்டப்பட வேண்டியிஜருந்த போதிலும் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றின் குறிப்புக்களில் பொருத்தமான பெறுமதிகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | திறைசேரியில் அரச கணக்குகள் திணைக்களத்தில் CIGAS வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய 2018 திசெம்பர் 31 ஆம் திகதி அறிக்கையில் காட்டப்படாத ரூபா 10,968,825 ஆன பெறுமதியான சொத்துக்களின் ஆரம்ப மீதி ஆக மீளவும் தரவுப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டு காணப்பட்டிருந்தது. இச்சீர்செய்தல் தொடர்பாக விளக்கப்படுத்தல் 2019 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பாக பெற்றுக்கொடுக்கப்பட்ட ஏசீஏ 06 மாதிரியுடன் முறையாக ஒப்பிட்டுவதற்கு ஒரு நிரல் காணப்பட்டிருக்கவில்லை. அதனால் 2018 ஆம் ஆண்டுடன் தொடர்பான இறுதி மீதி 2019 சனவரி 01 ஆம் திகதிக்கிணங்க |

மேற்குறிப்பிட்ட தகவல்களுடன் ஒப்பிட்டு பெறப்பட்ட மீதி ரூபா 39,593,266.53 இனை இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்படுள்ள என்பதனை தயவுடன் கருத்தில் கொள்ளவும்.

**1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த படிவங்களிற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகள் மற்றும் முதலீட்டு வருமானங்கள் தனித்தனியாக காட்டப்படல் வேண்டும். ஆனால் இவை அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருபத்திற்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகள் மற்றும் முதலீட்டு பெறுவனவுகள் ஏசீஏ 03 ஆம் படிவத்தில் தனித்தனியாக காட்டப்பட்டுகின்றது. |
| (ஆ) | 31 திசெம்பர் 2019 அம் ஆண்டில் முடிவடைந்த்தன் பிரகாரம், நிதி நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள், மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் முதலீட்டுகள் சீராக்கம் செய்த பின்னர், காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் தேறியமாற்றம் ரூபா 5,998,478 | சுற்றுநிருபத்திற்கமைய நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும் | தொழிற்பாடுகள் மறறும் மூதலீட்டு நடவடிக்கையில் பெறப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் (எ) மற்றும் நிதி நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் (ஒ) அகிய இரண்டுக்கும் இடையிலான தேறிய காசுப்பாய்ச்சல் (-எ)-(-ஒ)=0 என காட்டப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | இற்கு பதிலாக பூச்சியமாக காணப்பட்டது. | | |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் திரண்ட காசோலை மீதியுடன் ஒப்பிடும் போது தொழிற்பாட்டு நடவடிக்கைகள் கீழ் காசுப் பெறுவனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 5,664,694 பெறுமதியானது வேறுபாடாகவுள்ள போதிலும் நிதிச் செலவினங்களில் ரூபா 54,396,593 ஆன வேறுபாடும், முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காசுப் பெறுவனவுகளில் ரூபா 38,070,753 பெறுமதியான வேறுபாடும நிதிச் செலவினங்களில் ரூபா 29,373,284 ஆன வேறுபாடும், நிதி நடவடிக்கையின் கீழ் காசுப் பெறுவனவுகளில் ரூபா 18,060,612 பெறுமதியான வேறுபாடும், நிதிச் செலவினங்களில் ரூபா 19,444,884 ஆன வேறுபாடுமாக கண்டறியப்பட்டது. இவ் வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிவதற்கு தேவையான விபரமான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதிகள் மற்றும் செம்மைபார்ப்பதற்கு தேவையான ஆவணங்கள் உள்ளடக்கிய நிதிநிலைமைக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு உடனடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது தயாரழிக்கும் போது திரண்ட காசோலை மீதிகளின் தகவல்களை கருத்தில கொள்ளமுடியவில்லை. இதனை தயாரிக்கும் போது 104 மற்றும் 149 ஆகிய இரண்டு செலவினத் தலைப்புக்களுக்கும் பொருத்தமான செலவினங்கள், வருமானங்கள் மற்றும் வைப்புத் தொகைகள் ஆகியவற்றினை உள்ளடக்கியே தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும் ஏனைய பெறுவனவுகளுடன் உள்ளடக்கிய செலவினப் படிவத்தில் காட்டப்பட்டிருந்தன. முதலீட்டு செயற்பாடுகள் தொடர்பான செலவினங்கள் ஏசீஏ படிவத்தின் காசு புத்தகத்திற்கமைய செலவினத்தை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. |

**1.6.5 காசு சீராக்கல் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசு சீராக்கல் கணக்கு தயாரிக்கும் போது நிதி ஒழுங்கு விதி 208 இன் கீழ் ஏனைய அமைசசுக்களின் முக்கிய பேரேடுகளினால் செய்யப்படும் செலவினங்கள் திறைசேரிப் புத்தகத்திற்கிணங்க ரூபா 2,836,242,553 ஆக காணப்பட வேண்டும் என்ற போதிலும் அது ரூபா 2,834,819,802 ஆக காட்டப்பட்டதினால் ரூபா 1,422,751 ஆனது குறைத்து காணப்பட்டிருந்தது. அத்துடன் நிதி ஒழுங்கு விதி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுகளிற்காக மேற்கொண்ட செலவினங்கள் திறைசேரியின் புத்தகத்திற்கிணங்க ரூபா 1,535,647,608 ஆனதுடன் காசு சீராக்கல் கணக்குகளில் ரூபா 1,521,382,362 ஆக காட்டப்பட்டதினால் ரூபா 14,265,247 பெறுமதியானது குறைவாக வரவு வைக்கப்பட்டிருந்தது. | காசு கணக்குகளை சீராக்கம் செய்வதற்கு சரியான பெறுமதிகளை பதிவு செய்து தயாரிக்கப்படல் வேண்டும். | காசு சீராக்கல் கணக்குகள் தயாரிக்கும் போது செலவினத் தலைப்பு 149 இற்கு இணங்க உரிய செலவினங்கள், சேமிப்புக்கள், முற்பணங்கள், வருமான நிலுவைகள் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எசீஏ 2 (ii), ஏசீஏ 3,4,5 ஆகிய விடயங்களை கருத்திற்கொண்டு பெறப்பட்டுள்ளன. |
| (ஆ) திறைசேரி புத்தகத்துடன் ஒப்பிடும் போது காசு சீராக்கல் கணக்கில் முன் கொண்டுவரப்பட்டு வரவு வைக்கப்பட்ட தொகை ரூபா 13,024,902 ஆக இருக்க வேண்டும். எனினும் காசு சீராக்கல் கணக்கில் ரூபா 6,272,051 ஆக காட்டப்பட்டிருந்ததினால் | மேலே குறிப்பிட்டது | மேலே குறிப்பிடப்பபடது |

ரூபா 6,752,851 பெறுமதியானது குறைத்து வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் காசு சீராக்கல் கணக்கின் வரவுப் பெறுமதி திறைசேரி புத்தகத்துடன் ஒப்பிடும் போது ரூபா 10,306,113 பெறுமதியாக காட்டப்படவேண்டியிருந்த போதிலும் ரூபா 25,045,851 ஆக காட்டப்பட்டிருந்தது. இதனால் ரூபா 14,739,738 பெறுமதியானது அதிகரித்து வரவு வைக்கப்பட்டுள்ளது.

(இ) காசு சீராக்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்ட வைப்புத் தொகை ரூபா 13,890,699 பெறுமதியாக காணப்படுகின்றது. இருப்பினும், அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களை ஒப்பீடும் போது ரூபா 3,401,657 பெறுமதியாக காணப்பட்டது. அது காசு சீராக்கல் கணக்கில் ரூபா 10,489,042 பெறுமதியானால் கூடுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், அமைச்சுக்களின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் புத்தகங்களுடன் ஒப்பிடும்போது சீராக்கல் கணக்கில் ரூபா. 5,384,188 பெறுமதியானது வரவில் காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் காசு சீராக்கல் கணக்கில் ரூபா. 14,528,955 பெறுமதியாக காணப்பட்டதினால் ரூபா 9,144,767 பெறுமதியானது கூடுதலாக வரவு வைக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டது

மேலே குறிப்பிட்டது

## 2. நிதி முகாமைத்துவம்

### 2.1 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படாத முற்பணக் கடன் மீதி ரூபா 100,208 பெறுமதியானது 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 10 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட போதிலும் இக் கடனை அறவிட்டுக்கொள்ள முடியவில்லை. | கடனை மீள அறவிட்டுக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத் தொகையினை அறவிட்டுக்கொள்வதற்கு புறநகர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் உத்தியோகத்தர்களை நீதிமன்றத்திற்கு ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் இரண்டு முறை ஆணை வழங்கப்பட்டிருந்த போதிலும் உத்தியோத்தர்கள் சமூகமளிக்காமையினால் இவ வழக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுடன் தொடர்புடைய செலவுத் தலைப்பின் கீழ் திட்டம் 01 இல் 17 செலவின விடயங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டது. நிதி ஒழுங்கு விதி இலக்கம் 66/69 இன் கீழ் ரூபா 71,450,000 மற்றும் 01 செலவின விடயமானது வகைமாற்றத்திற்கான ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 16,000,000 பெறுமதியும் 02 செலவின விடயத்தின் மற்றும் 10 செலவின விடயத்திற்கும் நிதி ஒழுங்க விதி இலக்கம் 66/69 இன் கீழ் ரூபா 145,150,000 பெறுமதியும் 05 செலவின விடயத்திற்கான வகைமாற்றத்திற்கான ஒதுக்கீட்டின் கீழ் | நிதி ஒழுங்கு விதியின் 50 இற்கமைய சரியான செலவின மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடுகளில் சில செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடுகள் கோரப்பட்டிருந்த போதிலும் அதே பெறுமதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே ஆண்டின் ஒவ்வொரு செலவின விடயங்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகளின் பற்றாக்குறையினை நிதி ஒழுங்கு விதி இலக்கம் 66 இன் இடமாற்றத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு பாதீட்டு திணைக்களத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. நிதி ஒழுங்கு விதி இலக்கம் 66 இற்கமைய தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3,043,990,000 பெறுமதியாகவும் மற்றும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 3,276,590,000 ஆனது மேலதிக ஏற்பாடுகளாக வழங்கப்பட்டிருந்தன. இப் பெறுமதியானது அந்த செலவினத் தலைப்பின் மதிப்பிடப்பட்ட மொத்த ஒதுக்கீட்டு ரூபா 12,439,000,000 பெறுமதியே, 26 சதவீதமாகும். | | ஒதுக்கீடுகள் இடமாற்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தன. மேலும், அமைச்சரவை ஞாபனக்குறிப்பினால் செலவின தலைப்பு 149 இன் கீழுள்ள நிகழ்ச்சிதிட்டம் 01 இலுள்ள 01 செலவின விடயத்திற்கும் மற்றும் நிகழ்ச்சிதிட்டம் 02 இலுள்ள 05 செலவின விடயங்களின் செயற்திட்டங்களுக்கிடையிலான வேறுபாடுகளை அமுல்படுத்துவதற்கு அமைச்சிற்கு வகைமாற்றத்தினால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தன. அதன்படி, செலவின விடயத்தின் கீழ் வேறுபட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கிடைக்கக்கூடிய வகைமாற்றலினால் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் 01 இல் 19 செலவின விடயத்திற்காக ரூபா 71,450,000 பெறுமதியும் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 02 இல் 06 செலவின விடயத்திற்காக ரூபா 145,150,000 பெறுமதியும் நிதி ஒழுங்க விதி 66/69இன் கீழ் ரூபா 216,600,000 பெறுமதியான ஏற்பாடுகள் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. தனித்தனியான செலவின விடயத்தின் மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கான எல்லைகள் 02 சதவீதம் தொடக்கம் 95 சதவீதமாக காணப்படுகின்றன. | நிதி ஒழுங்கு விதியின் 50 இற்கமைய சரியான செலவின மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களை கட்டுப்படுத்துவதனூடாக செலவின விடயங்களினால் சேமிக்கப்பட்ட ஒரு பகுதியை வேறு செலவின விடயங்களுக்கு இடமாற்றம செய்வதற்கு அத்தியாவசிய செலவினங்களுக்கான பயன்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 12 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடுகள் ரூபா 1,699,750,000 பெறுமதியானது மீதியாக காணப்படுகின்றது. | நிதி ஒழுங்கு விதியின் 50 இற்கமைய சரியான செலவின மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். | செலவின முகாமைத்துவம் UNIDO இற்கு அங்கத்துவ கட்டணத்தினை செலுத்த தவறியதுடன் கூட்டுறவு துறையின் கடன் தள்ளுபடிக்கான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்க தவறியது. 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 09/2019 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய செயற்படுத்துவதற்கும், ஓய்வூதிய சலுகையினை பெற்றுக்கொள்கின்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை 05/2019 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய செலவின முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஈ) | செலவினத் தலைப்பின் கீழ் நிகழ்ச்சித்திட்டம் 01 இல் மற்றும் 02 இல் செலவின விடயங்கள் 38 இற்காக ரூபா 6,761,509,203 மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஏற்பாடுகள் செலவிடப்பட்டதன் பின்னர் இவ் விடயச் செலவினத்தில் மீதியாகவுள்ளவை 31 சதவீதம் முதல் 97 சதவீதம் வரை காணப்படுகின்றது. | நிதி ஒழுங்கு விதியின் 50 இற்கமைய சரியான செலவின மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். | செலவின முகாமைத்துவம் மற்றும் நிதிப்பற்றாக்குறை, பதவி வெற்றிடங்கள், பயனாளிகளுக்கான கட்டுப்பாடு, தோட்டத் தொழிலாளர்களுக்கான கடன்கள் தொடர்பான கட்டுப்பாடுகள், திறைசேரியிலிருந்து நிதியினை பெற்றுக்கொள்வதற்கான நிதிப்பற்றாக்குறையினை மீள்நிரப்புவதற்காக வங்கியிலிருந்தும் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்தும் கடன்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள போதிலும் திறைசேரியானது போதுமான நிதியனை வழங்கியிருக்கவில்லை. |
| (உ) | மீளாய்வாண்டில் பெறப்பட்ட புதிய பொருட் செலவினத்திற்காக வகைமாற்றல் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மொத்த ஏற்பாட்டிற்கு மேலதிகமாக ரூபா 1,000,000,000 | கைத்தொழில் துறை செயற்திட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 07 கைத்தொழில் துறையினை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 05 கைத்தொழில் துறைகளுக்கு மட்டுமே சட்டரீதியான இட ஒதுக்கீடு மேற்கொள்ளமுடியவில்லை, ஒரு கைத்தொழில் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. | | துறைக்கான உரிய இடம் பெற்றுக்கொள்ள முடியவில்லை மற்றுமொரு கைத்தொழில்துறைக்கு மூன்றாம் கட்ட நிர்மாண நடவடிக்கைகளை செய்வதற்கு போதுமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 05/2019 மற்றும் 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கைகள் செலவின விடயங்களில் சேமிப்பதற்கான காரணங்களாக செயல்பட்டதாக நிதி நிலைமைக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவை உண்மையில் இந்த சுற்றறிக்கைகளுக்கமைய இணங்கியிருக்கவில்லை. எனவே அச்செலவின விடயம் 04 இன் மீதிகளுக்கு மேலதிகமாக ரூபா 329,192,769 பெறுமதியானது பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | சுற்றுநிருபத்திற்கமைய நடவடிக்கைக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ் ஆண்டில் திட்டங்களை செயல்படுத்த மாவட்ட செயலகங்கள் மற்றும் கைத்தொழில்துறைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆண்டின் இறுதியில் CIGAS இனால் செலவினங்கள் நேரடியாக திறைசேரிக்கு தெரியப்படுத்தப்படுகின்றன. |
| (எ) | செலவின விடய இலக்கம் 149-2-3-34-2001 இற்கு ரூபா 225,000,000 பெறுமதியான ஒதுக்கீடுகள் 100 சத வீதம் சேமிப்பாக காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இச் செலவின விடயத்திற்கு ரூபா 34,774,233 பொறுப்புக்களாக காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் கீழ் ஒரு கட்டிடம் கட்டும் பணியின் தொடக்கத்தில் பணி முன்கூட்டியே தொடங்குவதற்கான முற்பணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அந்த முற்பணக் கொடுப்பனவுகளின் பெறுமதி பிணைப் பத்திரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | நிதி ஒழுங்கு விதி 66 கீழ் 03 செலவின விடயங்களுக்கு ரூபா 175,000,000 மேலதிகமாக ஒதுக்கீடாக மாற்றப்பட்டிருந்த போதிலும் மாற்றப்பட்ட மொத்த ஏற்பாடுகளும் மீதியாகவே காணப்படுகின்றன. | சரியான செலவினங்கள் மதிப்பிடப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். | 5/2019 மற்றும் 7/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கமைய செலவினங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| (ஐ) 04 திசெம்பர் 2019ஆம் திகதியில் 7/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு அமைவாக மின்சாரம், நீர், தொலைபேசி செலவினங்கள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பிராயாணச் செலவினங்கள் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை திகதிக்கு பின்னரான 03 செலவின விடயங்களிற்கு நிதி ஒழுங்குவிதி 66 இற்கமைய ரூபா 1,800,000 வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தன. | சுற்றுநிருபத்திற்கமைய நடவடிக்கைக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். | 04 திசெம்பர் 2019 ஆம் திகதியிடப்ப்டட 7/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையில் செலவினங்களை சிக்கனமாக செயற்படுத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தாலும், சுற்றறிக்கையின் திகதிக்கு முன்னரும் பினனரும் கொடுப்பனவினை மேற்கொள்ளுவதனை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் அத்தியாவசிய செலவினங்களை (பயணச் செலவுகள், எழுதுபொருள்) ஈடுசெய்ய தற்போதுள்ள ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாததால் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதியின் 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்திற்கமைய நிதியாண்டில் உரிய நடவடிக்கைகள் அனைத்து கடன்களும் அந்த ஆண்டில் செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும், அடுத்த ஆண்டில் மாற்றும் நோக்கத்துடன் எந்தவொரு பொறுப்பையும் முன்னெடுக்கக்கூடாது. ஆனால், 31 திசெம்பர் 2019 ஆம் திகதியின் படி ரூபா 1,950,827,981 கடன்களை அமைச்சு வழங்கியிருந்தது. | சுற்றுநிருபத்திற்கமைய நடவடிக்கைக்கு மேற்கொள்ளப்பட வேண்டும | திறைசேரியினால் வழங்குவதற்கு போதிய நிதியில்லாமையினால் பல்வேறு திட்டங்களுக்கான செலவுகளை இவ் ஆண்டின் இறுதியில் தீர்வ செய்ய முடியவில்லை. CIGAS திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பான பொறுப்புகள் நேரடியாக திறைசேரியில் தெரிவிக்கப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 06 செலவின விடயங்களுக்கான நிகர ஒதுக்கீடு பயன்படுத்திய பின்னர் மீதியாகவுள்ள தொகை ரூபா 252,225,872 ஆகவும் ஒதுக்கீடு ரூபா 355,866,545 பெறுமதியான தொகையாகவும் மற்றும் மேலதிகமான தொகையாக ரூபா 608,092,417 ஆகவும் பொறுப்புக்களில காட்டப்பட்டிருந்தது. | நிதி கூற்றுக்களில் உள்ள பொறுப்புகள் மற்றும் கடன்பாடுகள் தொடர்பான விபரங்கள் கடன்களுடன் ஒப்பிடப்பட வேண்டும் மற்றும் நிதி மதிப்பீடுகளில் சரியான பெறுமதிகள் சேர்க்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான கடன்களை முற்கொண்டு வந்ததினால் இந்த இருப்பு உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் 2019 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளுக்கு அப்பால் எந்த பொறுப்புக்களும் காணப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிச் செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தையும் அதன் முன்னேற்றத்தையும் ஆராய்ந்தால், 23 திட்டங்களில் பௌதீக ரீதியான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை, மேலும் இரண்டு திட்டங்களில் ஒரு சதவீதத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. அதன்படி, மேற்குறிப்பிட்ட 25 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா. 212.74 மில்லியனில் ரூபா. 199.48 மில்லியன் பயன்படுத்தப்படாமல் மீதியாக காணப்பட்டது. | திட்டங்களை சரியான நேரத்தில் தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மன்னார் தொழிற்பேட்டையின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 2019 யூன் 30 ஆம் திகதி வரை அமைச்சினால் ரூபா 306.96 மில்லியனை செலவிட்டிருந்தாலும், 2019 ஓக்டோபர் 15 ஆம் திகதி அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, ஒரு தொழிற்சாலை கூட செயற்பட்ருக்கவில்லை. 20,000 சதுர அடி பரப்பளவில் இரண்டு தொழிற்சாலை கட்டிடங்களை அமைச்சினால் அமைக்கப்பட்டிருந்த போதிலும் தனித்தனியாக ரூபா 100.05 மில்லியன் பெறுமதி செலவில் 02 கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதுவரை எந்த முதலீட்டாளரும் அவற்றில் முதலீடு செய்ய முன்வராததினால் அக்கட்டடங்கள் பயன்பாடற்று காணப்படுகின்றன. | திட்டங்கள் சரியான நேரத்தில் தயாரிக்கப்பட வேண்டும், இதனால் திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற முடியும் மற்றும் நிறைவடைந்த கட்டிடங்களுடன் தொடர்புடைய நோக்கங்களை அடைய பயன்படுத்தப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) வெலியோயா தொழிற்பேட்டையில் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு 40 ஏக்கர் மற்றும் அமைச்சினால் | திட்டங்கள் சரியான நேரத்தில் தயாரிக்கப்பட வேண்டும், இதனால் திட்டங்களை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா. 256.94 மில்லியன் 31 திசெம்பர் 2019 வரை எந்தவொரு தொழிற்துறையும் நிறுவப்படவில்லை. அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா.178.78 மில்லியன் செலவில் மூன்று கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக் கட்டடங்களில் தொழில்களைத் தொடங்க எந்த முதலீட்டாளர்களும் முன்வராததால் அவை பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றன. | நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற முடியும் மற்றும் நிறைவடைந்த கட்டிடங்களுடன் தொடர்புடைய நோக்கங்களை அடைய பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முசாலி ஆடை மற்றும் தொடர்புடைய தொழில் மேம்பாட்டு திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு 2015 ஆம் ஆண்டில் 03 தொழிற்சாலைக்கு ரூபா 167.9 மில்லியன் செலுத்தப்பட்டது, ஆனால் நிலம் கையகப்படுத்தும் பிரச்சினைகள் காரணமாக இந்த திட்டம் கைவிடப்பட்டது மற்றும் 2020 யூலை 01 ஆம் திகதிக்குள் பணம் மீட்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தினை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது வேறு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேறு ஆடை கைத்தொழில்களுடன் தொடர்புடைய தொழில் மேம்பாட்டு திட்டத்தின் ஆரம்ப பணிகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தற்போது தொழிற்பாட்டில் காணப்படும் மேற்குறிப்பிடட் 17 தொழில்துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிலத்தின் பரப்பளவு 634.92 | குறிப்பிட்ட காலஎல்லைக்குள் செயற்திட்டம நிறைவேற்றுவதற்கு ஏற்ப முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு கால | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| ஏக்கர் காணியில் 235.58 ஏக்கர் காணிகள் 2019 யூன் 30 ஆம் திகதியிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது மொத்த நிலப்பரப்பில் 37 சதவீதமாக காணப்படுகின்றது. | அட்டவணைக்கமைய நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய அனைத்து நிறுவனங்களும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய அனைத்து நிறுவனங்களும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. | இவ் அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் மிக விரைவில் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ‘‘நங்வமு லங்கா’’ செயற்திட்டத்திற்கிணங்க பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 136,160,833 ஆக என்பதுடன் கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 4,324,470 ஆகும். இப் பொறுப்புக்கள் மற்றும் | தேசிய செயற்பாட்டு குழுவின் செயற்திட்டங்களுக்கு உரிய நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கடப்பாடுகளின் செலவினங்கள் குறித்த தகவல்கள் 2020 யூன் 30 ஆம் திகதிவரையிலும் அமைச்சிடம் காணப்பட்டிருக்கவில்லை. | மய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | அமைச்சின் செலவின பேரேட்டிற்கமைய ‘‘நங்வமு லங்கா’’ தேசிய விவசாய அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக 25 மாவட்ட செயலக அலுவலகங்களிற்கு அனுப்பப்பட்ட ஒதுக்கீடுகளின 10 மாவட்ட செயலக அலுவலகத்தினால் ரூபா 34,091,061 பெறுமதியான செலவினம் காணப்பட்டதுடன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 04 மாவட்ட செயலக அலுவலகங்களின் ‘‘நங்வமு லங்கா’’ செயற்திட்டத்திற்காக இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 06 மாவட்ட செயலக அலுவலகங்களினால் ரூபா 1,722,014 பெறுமதியான செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. எனினும் இச் செலவினங்கள் என்னவொன்று அறியப்பட்டிருக்கவில்லை. | தேசிய செயற்பாட்டு குழுவின் செயற்திட்டங்களுக்கு உரிய நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 4 நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடையாளம் கண்டுகொள்வதோடு, அதன் கீழ் உள்ள குறிகாட்டிகளையும் அடையாளம் கண்டுகொள்வதுடன் தரவு சேகரிப்பு மற்றும் சேமிப்பிற்கு தேவையான அடிப்படைகள் மட்டுமே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை இனங்கண்டு அவற்றினை அடைந்து கொள்வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |